Since 1972

ஜெம்ஸ் சத்தம்

ஜூலை 2015

உள்ளே

அன்பின் மடல் •
நன்மை தரும் தேவன் •
பணித்தளச் செய்திகள் •

ஜெம்ஸ் திருச்சபை

வாலிபர் கூடுகை

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

ஆண்டவரின் செட்டைகளின் கீழ் இருக்கும் ஆரோக்கியம், நம்மை வெளியே புறப்பட்டுப் போய் கொழுத்தக் கன்றுகளைப் போல வளரச் செய்யும் என்று வாக்குத் தந்தவரின் நாமத்தில் வாழ்த்துக்கள் (மல். 4:2). தேசமும், தலைவர்களும், சபைகளும் வளர்ச்சியைப் பற்றி அடிக்கடி பேசுகின்றனர்; பொருளாதார வளர்ச்சியையும், எண்ணிக்கையில் வளர்ச்சியையும் நாம் அடிக்கடி வலியுறுத்துகிறோம்.

நாமும் புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் போல **வளரவேண்டும்** என்பது தேவ நோக்கம்; அது, தேவ வசனத்தினை வாஞ்சிப்பதினால் உண்டாகும் என்பது வேதம் தரும் வெளிச்சம் (1பேதுரு 2:3).

சபையும், அதன் மக்கள் அனைவரும் கிறிஸ்துவின் பூரண அளவுக்குத் தக்கதாக வளரவேண்டும் என்ற நோக்கிலேயே தேவன் அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும், போதகர்களையும், மேய்ப்பர்களையும் ஏற்படுத்தியுள்ளார் என்று வேதம் நமக்குக் கற்றுத்தருகிறது. (எபேசியர் 4:11-13)

இயக்கங்கள் வளருவதனைத் தடுக்க (ஆதி சபையின் வளர்ச்சியையும், தாக்கத்தினையும்) **அதிகாரிகள் முயல்வார்கள் என்பது வேதம் காண்பிக்கும் சித்திரம்**. (அப். 5:24-28)

வளர்ச்சி அநேக நேரங்களில் மனிதக் கண்களுக்குத் தெரியாமலேயே நடக்கக்கூடியது என்பதனைச் சுட்டிக்காட்டிய இயேசு, **"தேவனுடைய இராஜ்யமானது**, ஒரு மனுஷன் நிலத்திலே விதையை விதைத்து இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, **அவனுக்குத் தெரியாதவிதமாய்** விதை முளைத்துப் பயிராவதற்கு ஒப்பாயிருக்கிறது" (மாற்கு 4:26,27) என்றார்.

"உயிர் உள்ள எதுவும் நிறைந்த பலனைத் தானாய்க் கொடுக்கும்" என்பது இயேசுவின் கோட்பாடு. (மாற்கு 4:28)

கூடவே, "தேவனுடைய இராஜ்யம் ஒரு கடுகு விதைக்கு ஒப்பாக இருக்கிறது. அது பூமியில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறிதாயிருக்கிறது; விதைக்கப்பட்டபின்போ, அது வளர்ந்து சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதினுடைய நிழலின் கீழ் வந்தடையத்தக்கதாக பெரிய கிளைகளை விடும்" என்பது நாம் அறிந்த உண்மை. (மாற்கு 4:31,32)

இந்தக் காரியங்கள் துடிப்போடு செயல்படும் ஜீவனை உடைய அனைத்து இயக்கங்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும்.

ஆயினும், வளரும் விதத்தினை நான் இரண்டாகப் பிரித்துப் பார்க்கிறேன். **ஆலமரமாகவும் வளரலாம், வாழைமரமாகவும் வளரலாம்** (Banyan tree or Banana tree). ஆலமரம் போன்று வளரும் ஒரு ஸ்தாபனத்தின் கீழ் மற்றவைகள் வளர வாய்ப்பில்லை. ஆனால், வாழைமரம் தான் மரிப்பதற்குள் 10 சிறிய வாழைமரங்களை உருவாக்கிவிடுகிறது. இதனால் **நாளொரு மேனி பொழுதொருவண்ணமாக அது உலகெங்கும் வியாபிக்க வாய்ப்பும் பெருகுகிறது. பல ஏக்கர்களை ஆக்கிரமித்தும்விடுகிறது. அநேகரை உயிர்ப்பித்து போஷிக்கவும் போதுமான பெலனுள்ளதாய் இருக்கிறது.**

எனவே, என்னைப் பொருத்தவரையில் சபையோ, ஸ்தாபனமோ, வாழைமரத்தினைப் போன்று பெருகுவதனையே வாஞ்சிப்பேன்; வாழ்த்துவேன்.

இந்தக் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தால் இன்று வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனையோ (CMC), 100 ஆண்டுகள் 200 ஆண்டுகள் கொண்டாடும் கல்விச் சாலைகளோ கல்லூரிகளோ இந்திய நாடெங்கிலும் பலநூறுகளை உண்டாக்கியிருக்கலாமே! **இது மெகா சர்ச்** (Mega Church)**என்ற எண்ணத்திலிருந்து அநேகரை விடுதலையாக்கி, தேசமெங்கும் சபையினை ஸ்தாபிக்க உற்சாகப்படுத்தியிருக்கும்.**

தாலந்துகளும் பெருகியிருக்கும், பரவலாக உபயோகப்பட்டிருக்கும்; தேசமும்

தேவனை அறிந்திருக்கும்.

தனியார் நிறுவனமான அப்பொல்லோ ஆஸ்பத்திரிக்கு அந்த தரிசனம் உண்டு. **1983-ல்** ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆஸ்பத்திரி இன்று இந்தியாவின் **பல இராஜ்யங்களிலும்** (29) உலகில் **இலங்கை, பங்ளாதேஷ், கானா (Ghana), நைஜீரியா, மவுரீஷியஸ்,ஓமன், குவைத்** போன்ற நாடுகளிலும் பரம்பிவிட்டதே. 5000 – க்கும் மேற்பட்ட டாக்டர்களின் சேவை அல்லது திறமை உலகின் மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கிறதே. அதனுடைய குடையின் கீழ் ஆயிரக்கணக்கானோர் மருத்துவப் படிப்பு கற்றுவருகின்றனரே.

2000 ஆண்டுகளாக செயல்பட்டுவரும் கிறிஸ்துவின் சபையும், ஸ்தாபனங்களும், கல்விக்கூடங்களும் இப்படிப் பெருகாதபடி **சத்துரு தந்திரமாக நம்மை முடக்கிவைத்துவிட்டானோ! அல்லது குறுகிப்போக குறுநோக்கங்கொள்ள வைத்துவிட்டானோ! இணைந்து செயல்படவிடாமல் செய்துவிட்டானோ!**

“ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்” என்று இயேசு சொன்னது இதுதானோ! (லூக். 16:8)

நம்மிலேயே காணப்படும் தன்னயம் (selfishness), **தரிசனமற்ற நினைவுகள், பிறரைக் குறித்து கரிசனையற்ற வாக்குவாதங்கள்** (meaningless debates), **இழக்க விரும்பாத மனோபாவனை, பகிர்ந்தளிக்க முடியாத மனநிலை, ஒத்துப்போகக்கூடாத சந்தேகங்கள், வாழ்நாள் குறுகியது என்பதனை உணராத இருதயம், உள்ளான தேவையற்ற பயங்கள், மற்றவர்களிடம் கற்றுக்கொள்ள விரும்பாத கல் இருதயம், கவனிக்கத் தவறிய கண்கள் இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.**

நம்முடைய தேவன் பெருக்கத்தினை செய்த அத்தனை சம்பவங்களையும் வாசித்துப் பார்த்தால் இன்னொரு இரகசியம் விளங்கும்.

நானும் என் மகனும் சாப்பிட்டு செத்துப்போகப்போகிறோம் என்றாள் சாறிபாத் விதவை. ஆனால், எலியாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபோது அவளும் இவனும் **அவள் வீட்டாரும் அநேகநாள்** சாப்பிட்டார்கள் என்று வேதம் கூறுகிறது. (1இராஜா. 17:12,15)

ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் வேறொன்றும் இல்லை என்ற தீர்க்கதரிசியின் மனைவியாகிய விதவை, அயல்வீட்டாரிடத்தில்

அநேகம் **வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி**, அந்தப் பாத்திரங்களை நிறைத்த பின்னர், வேறு பாத்திரம் இல்லை என்று சொன்னபோதுதான் பெருக்கம் நின்றது. (2இராஜா. 4:1-6)

முதற்பலனான வாற்கோதுமையின் இருபது அப்பங்கள், நூறு பேருக்கு முன்பாக எப்படி வைப்பது என்ற கேள்விக்கு, **பகிர்ந்தளிக்கப்பட்டபோது** இடமில்லாமற்போயிற்று. (2இராஜா. 4:42-44)

ஒவ்வொருவனும் கொஞ்சமாய் எடுத்துக்கொண்டாலும் இருநூறு பணத்திற்கு அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே, ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் இத்தனை ஜனத்திற்கு எம்மாத்திரம் என்ற அங்கலாய்ப்பு, **பகிர்ந்தளிக்கப்பட்டபோது** களிப்பாக மாறிற்றே. (யோவான் 6:5-13)

இது இன்றும் நடக்க வாய்ப்புண்டு. நாம் **குறைவுகளைக் கண்டு துவண்டு போவதற்கு அல்ல**; **மாறாக, துணிந்து செயல்படுவதற்கு அழைக்கப்பட்டவர்கள்**. **தரிசனக் குறைவும், கரிசனையின்மையுமே நம்மைத் தடுக்க முடியும்**.

அதினால்தானே நம்மை ஆண்டவர் உப்புக்கும், ஒளிக்கும் ஒப்பிட்டார். இரண்டும் பரவும் தன்மை கொண்டதல்லவா! **கரைந்து, கலந்துபோகும் உப்பாக மாறுவோம்**. **இருளதனைக் கிழித்து, படரும் ஒளியாக மாறுவோம்**.

ஆலமரமாக நின்று அனைத்து பேரையும் வளரவிடாமல் தடுக்கும் மரமாக நின்றது போதும். வாழைமரமாக பலரையும் நம்மில் இருக்கும் சாரத்தினைப்போல சாரமுள்ளவர்களாய், தரிசனமிக்கவர்களாய், செயல்படத் துடிப்போராய் எழும்புவோம். **காட்சிப் பொருளாக மாறாமல், சாட்சி பகரும் கூட்டமாய் மாறி படருவோம்**; **பாதிப்புகளை ஏற்படுத்துவோம்** (Impact).

ஒன்றாகிலும் மலடாயிராமல், எல்லாம் இரட்டைக் குட்டியீன்றவைகளுமான ஆட்டுமந்தை நாம் (உன்ன. 4:2). இதனை இன்றைய சபை உணரட்டும்.

நாம் ஊழியம் செய்யும் நேபாள் தேசத்தில் துயரங்கள் தொடர்கின்றன. **3 லட்சம் வீடுகள் நொறுங்கியதும்**, ஆயிரங்கள் உயிரை இழந்ததும், ஒரே மாதத்தில் **258 முறை நிலம் அதிர்ந்ததும்**, அதனால் உண்டான நிலையற்ற மனநிலையையுடைய மக்களும் (Trauma) நம்மால் முடிந்த அளவு உதவி செய்ய Dr.அசோக் தலைமையிலும், சகோ.தானியேல் தலைமையிலும் நம்மைத் தள்ளிற்று. **பல லட்சங்களை நாம் வாரி இறைத்தோம்**; இன்னும் சேதங்கள் நடக்கும் என்ற அபாயக்குரல் மக்களை தேவனைத் தேடச் செய்யவேண்டும்.

ஆனால், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன், வெள்ளி, செம்பு, கல், மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும், காணவும் கேட்கவும் நடக்கவுமாட்டாதவைகளாயிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு மனந்திரும்பவுமில்லை. தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூன்யங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை (வெளி. 9:20-21) என்ற வசனங்களின் நிறைவேறுதல் நடந்துவிடுமோ என்றே **அஞ்சுகிறோம்**.

அந்த பூமி அதிர்ச்சி, பீகாரிலும், நேபாளத்திலும் நம்முடைய **11 பள்ளிகளைப் பாழாக்கிவிட்டது**, கட்டிடங்களை சேதமுறச் செய்தது. செப்பனிடக்கூடாதவைகளாக சில கட்டிடங்கள் மாறிவிட்டன; ஜெபியுங்கள், அவைகளை சீரமைக்கவேண்டும்.

தேவ ஒத்தாசையால் நம்முடைய **பாலிடெக்னிக்** கல்லூரிக்கு AICTE அங்கீகாரமும், பீகார் அரசாங்க அங்கீகாரமும் ஆச்சரியப்படும் விதமாய் கிடைத்தது.

கூடவே, நீண்ட நாட்களாக எதிர்பார்த்த B.Ed.கல்லூரி அங்கீகாரமும் நமக்கு NCTE மூலம் வழங்கப்பட்டது. மாத்திரமல்லாமல்,D.Ed. பள்ளியை நடத்தவும் புதிய ITI ஒன்றை ஆரம்பிக்கவும் தேவன் உதவிசெய்தார். அவருக்கே மகிமை உண்டாகட்டும்.

பெங்களூரில் நடைபெற்ற பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களில் சுவிசேஷப் பணியினையும் சபை நிறுவும் பணியினையும், பயிற்சிப் பணிகளையும், ஊழியர் நல திட்டங்களையம் அமலாக்கப் பல திட்டங்களைத் தீட்டவும், செயல் உருவம் கொடுக்கவும் தேவகரம் நம்மை வழிநடத்தியது.

இலங்கையிலும், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, மலேசியா, அமெரிக்கா, ஐரோப்பா, கனடா, மியான்மாரிலும் நம்முடையவர்கள் (Daughter organisations) **தீவிரமாய் செயல்படுகின்றனர்.**

ஏராளமான ஊழியர்களே இன்றைய தேவை. தேவன் அவர்களையும் காலா காலத்தில் அனுப்பி வருகிறார்; ஆயினும், இன்னமும் அதிக தேவை உண்டு; அறுப்புக்கு எஜமானனை நோக்கி அனுதினமும் வேண்டிக்கொள்ளுங்கள். அதுவே அவரின் பணி செய்ய நம்மை தீவிரிக்கச் செய்யும் உங்கள் ஜெபம் எங்கள் பெலன் என்பதனை மறக்காதீர்கள்.

ஊழியத்திற்கு அனைத்து தேவ மக்களையும் ஆயத்தப்படுத்தத்தக்கதாக ஒரு சேவையையும் பயிற்சியையும் ஆகஸ்ட் மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளோம். முறையாக அனைவரையும் இயக்குவிக்கும் திட்டம் இது. உலகமனைத்திற்கும் இதனைக் கொண்டு செல்லவும் பிரயாசங்களை மேற்கொண்டுள்ளோம். உங்களின் ஒத்துழைப்பும் ஜெபமும் தேவை.

ஆலமரமாய் நின்று காட்சிப் பொருளாக அல்ல
வாழைமரமாய் நின்று பரம்பிடவே வாஞ்சிப்போம் நாமும்
பெருக்கத்தின் ஆண்டவர் நம்மை மந்தையைப் போல்
பெருகச் செய்யத் துடிக்கிறார் கெஞ்சிடுவோம்

தரிசனமற்ற தன்னல வாழ்வு வாழ்ந்தது போதும்
தரிசு நிலங்களையும் நினைத்திடுவோம் நித்தமும் நாமும்
சாய்ந்திடும் முன், வாழ்ந்திடுவோரை வளமாக்குவோம்
சாயங்காலமும் வருதே இராக்காலம் தூரத்தில் இல்லையே

பிரபஞ்சத்தின் மக்கள் நம்மைப் பார்த்து கேலி செய்கிறார்
பிரபலமாய் வாழ நினைத்து, பிறர் துக்கம் மறந்திட்டோம் நாமும்
சுகவாழ்வு துறந்தவரே துணிந்திடுவார் போர் செய்ய
சுபமாய் முடிந்திடும் வெற்றி நம் ஆண்டவர்க்கே

அன்பரின் அறுவடைப் பணியில்
அன்பு சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

நன்மை தரும் தேவன்

உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! (சங். 31:19)

தம்மைப் பின்பற்றும் ஜனங்களுக்கு நன்மையை ஆயத்தம்பண்ணி வைத்திருப்பவர் நம் தேவன். **தனக்குப் பயப்படுகிறவர்களுக்கும்,** தன்னை **நம்புகிறவர்களுக்கும், தன்னை மனுஷருக்கு முன்பாகப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களுக்கும், அறிக்கையிடுகிறவர்களுக்கும்** அந்த நன்மை அவரால் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. பணமோ, பொருளோ, வேண்டியவைகளோ கிடைத்துவிட்டால் அதையே தேவனிடமிருந்து வரும் நன்மைகள் என்று அர்த்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் இன்றைய மக்கள்; ஆனால், தேவன் தன் ஜனத்திற்குக் கொடுக்கவிருக்கும் நன்மையின் அர்த்தமோ வேறு. நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! என்று வியப்புடன் சொல்லும் தாவீது, **"மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர்"** (சங் 31:20) என்று நமக்காக உண்டுபண்ணப்பட்டிருக்கும் நன்மையையும் அடையாளங் காட்டிக்கொடுக்கிறான். தேவனிடத்தில் கிடைக்கும் **இந்த நன்மையை நாம்**

அறிந்துகொண்டால் மாத்திரமே, அவருடனான உறவுக்கும், அவருடைய சமுகத்துக்கும் நாம் முக்கியத்துவம் கொடுப்போம். தேவனுடனான உறவைத் துண்டித்துவிட்டு வாழும் மனிதர்கள் உலகத்தில் அதிகம்.

மதத்தையல்ல, தேவனுடனான உறவைக் குறித்துப் பேசுகிறேன்...

ஒருமுறை மலேசியாவிலிருந்து நியூசிலாந்துக்கு விமானத்தில் நான் பயணித்துக்கொண்டிருந்தேன். எனது பக்கத்து இருக்கையில், நியூசிலாந்தில் வசிக்கும் மனிதர் ஒருவர் அமர்ந்திருந்தார்; பார்வைக்கோ அவர் சீன தேசத்து மனிதனைப் போல காணப்பட்டார். அவர் உறங்கி எழுந்ததும் அவருடன் சற்று பேசிக்கொண்டிருந்தேன். அவரைக் குறித்து நான் அறிய முற்பட்டபோது, அவர் என்னிடத்தில், "தான் நீயூசிலாந்தில் வசித்துவருவதாகவும், நீயூசிலாந்தைச் சேர்ந்த பெண்ணை மணமுடித்ததால் நீயூசிலாந்து வாசியாகவும் மாறிவிட்டதாகவும்; மலேசியாவிலிருக்கும் தனது தங்கையின் கணவர் மரணமடைந்ததினால், குடும்பத்தினரைச் சென்று சந்தித்துவிட்டு நியூசிலாந்து திரும்புவதாகவும்" என்னிடத்தில் சொன்னார். நீங்கள் எப்போதாவது கிறிஸ்தவ ஆலயத்திற்குச் சென்றதுண்டா? என்று நான் கேட்டபோது; இல்லை, இல்லை, நான் ஒரு நாஸ்திகன்; கடவுள், கோவில் இவையெல்லாம் மாய்மாலமான காரியங்கள் என்று சொன்னார். "மதத்தைக் குறித்து நான் உங்களிடத்தில் பேசவில்லை, உறவைக் குறித்துதான் பேச விரும்புகிறேன்; நான் தேவனுடைய சத்தத்தைக் கேட்கிறவன், எனவே தேவன் இருக்கிறார் என்று நம்புகிறவன்" என்றேன். அவரோ, "மதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் கஷ்டமில்லாமல் பணத்தைச் சம்பாதித்து அனுபவிக்கிறார்கள்; நாங்களோ, கடினப்பட்டு உழைக்கிறோம்" என்றார். என்னுடைய அனுபவ சாட்சியை அவருடன் பகிர்ந்துகொண்டேன்; மடிக்கணிணியின் மூலமாக ஜெம்ஸ் ஊழியங்களைக் குறித்து அவரிடத்தில் எடுத்துச் சொன்னேன்.

என்னுடைய தேவன் உயிரோடிருக்கிறார்; நான் அவருடைய உறவில் வாழ்கிறேன்; அவர் என்னை நடத்துகிறார், என்னோடு பேசுகிறார், அவருடனான உறவே ஜனங்களுக்கு நன்மை செய்ய எங்களைத் தூண்டி ஏவுகின்றது; இதுவே நான் பீஹார் வந்ததற்கான பிரதான காரணம் என தேவனுடைய காரியங்களைச் சொல்லி நான் அவரை வளைந்துகொண்டபோது, அவர், "எனது அக்காவும் அக்காவின் கணவரும் அவ்வப்போது கம்போடியாவுக்குச் சென்று ஊழியம் செய்துவருகின்றனர், என்னுடைய தாய் நன்றாக ஜெபிக்கிறவர்" என்று தனது குடும்பத்தைக் குறித்து எடுத்துச்சொன்னார். தேவபக்தியுள்ள குடும்பத்தில் பிறந்த நீங்கள் தேவன் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கின்றீர்களே! என்றேன். பிள்ளைகளைக் குறித்து நான் அவரிடத்தில் விசாரித்தபோது, தனக்கு நான்கு பிள்ளைகள் இருப்பதாகவும், அவர்கள் ஒருபோதும் ஆலயத்துக்குச் சென்றதேயில்லை

என்று பதிலுரைத்தார். தேவபக்தியுள்ள குடும்பத்தில் பிறந்த நீங்கள் தேவனை அறியாமற்போனது மட்டுமல்லாமல், **பெற்றெடுத்த நான்கு பிள்ளைகளையும் தேவனற்றவர்களாக மாற்றிவிட்டீர்களே** என்றேன். உங்களையும் பாரமாக்கிக்கொண்டீர்கள், தேவன் தந்த உங்கள் பிள்ளைகளையும் பாரங்களாக்கிவிட்டீர்களே என்று சொன்னேன். கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்து, தான் மட்டுமே அனுபவிக்கவேண்டும் என்று நினைக்கிற நீங்கள் தன்னலமான மனிதனல்லவா என்று நான் சொன்னபோது, அவரது உள்ளத்தில் உரைத்தது; "தேவனோடு உறவுகொள்ளவேண்டும் அதைக் குறித்து சிந்திப்பேன்; நான் மதம் என்று நினைத்தேன், ஆனால் இது உறவுக்கடுத்தக் காரியம் என்று இப்போது உணருகிறேன்" என்று பதில் கொடுத்தார். **தேவனுடனான உறவைத் துண்டித்துவிட்டு தன்னலமாக வாழ்பவர்கள் தேவனுடைய நன்மையை வாழ்க்கையில் அனுபவிக்க முடியாது.**

தேவனோடு உறவில்லையெனில், உன்னால் உலகிற்குப் பயனில்லை

நியூசிலாந்திலிருந்து ஆஸ்திரேலியா சென்று அங்கு ஊழியத்தை நிறைவேற்றிவிட்டு, ஆஸ்திரேலியாவிலிருந்து மலேசியா திரும்பிக்கொண்டிருந்தேன். எனது இடதுபுறத்தில் ஓர் மருத்துவர் அமர்ந்திருந்தார்; அவர் உயரமாயிருந்ததினால் விமானத்தின் இருக்கையில் கஷ்டப்பட்டு அமர்ந்திருந்தார்; அவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்; ஆனால், ஆஸ்திரேலியாவில் வசித்துவருகிறவர். இயேசுகிறிஸ்துவைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? என்று நான் அவரிடத்தில் கேட்டபோது, "நான் தியானம் பண்ணுகிறவன், இயேசுவின் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை, நான் தியானம் செய்யும்போது என்னைக் குறித்து அறிய முயற்சிக்கிறேன்" என்றார். உலகம் என்னும் சரீரத்தில் விரலைப் போன்ற நீங்கள் ஓர் அங்கம் என்று விளக்கினேன் நான். விரல் தன்னைத் தானே ஆராய்ந்து அறிந்துகொள்வதில் என்ன பிரயோஜனம்? அது மூளையோடு இணைக்கப்பட்டிருந்தால் மாத்திரமே அதற்கு உண்டாகும் வலியை உணரக்கூடும்; மற்ற உறுப்புகள் அந்த விரலுக்கு உதவி செய்ய மூளை கட்டளை பிறப்பிக்கும்; இப்படி இணைந்திருப்பதினாலேயே இந்த விரல் தன்னை அறிந்துகொள்ள முடியும். நரம்புகளின் மூலமாக மூளையுடன் இணைந்திருப்பதால் மாத்திரமே, விரல் தான் செய்யவேண்டியவைகளையும் அறிந்துகொள்ள முடியும். விரல் தன்னை மாத்திரம் அறிந்துகொள்ள முயற்சித்தால் அது தன்னலமுடையதாக மாறிவிடும். பெரிய சரீரத்தில் இணைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை விரல் உணர்ந்தால், அதன் மூலமாக அநேகருக்கு உதவிகள் உண்டாகும் என்று அவரிடத்தில் சொன்னேன்; எனது வார்த்தைகளைக் கேட்ட அந்த மருத்துவர், "நீங்கள் சொல்வது சரியானதுதான்" என்றார். **தேவனோடு நாம் இணைக்கப்பட்டிருப்பதினாலேயே, பிற உறுப்புகள் நமக்கு உதவி செய்யவும், நாம் பிறருக்கு உதவி செய்யவும் ஏது**

உண்டாகும். தேவனோடு நாம் இணைந்திருக்காவிட்டால், பிறருக்கு நம்மால் பிரயோஜம் உண்டாகாது.

நன்மைகளை தேவன் நமக்காக உண்டுபண்ணி வைத்திருக்கிறார்; **ஆனால், அவருடனான நம்முடைய உறவு எத்தகையதாயிருக்கின்றது?** அவருடனான உறவை அறிந்துகொள்ள மூன்று காரியங்கள் அவசியமானவைகள்; **அவரைப் பற்றிய பயம், அவர் மேலிருக்கும் நம்பிக்கை, ஜனங்களுக்கு முன்பாக அவரை அறிக்கை பண்ணுதல்** ஆகியவையே. உலகத்திலே சிலர் தங்களை இந்துக்கள் என்கிறார்கள், சிலர் சீக்கியர்கள் என்கிறார்கள், சிலர் இஸ்லாமியர் என்ற தங்களை அழைத்துக்கொள்கின்றனர். கடவுளுக்குப் பயந்திருக்கிறோம் என்று அவர்கள் சொன்னபோதிலும், கடவுளின் மேல் நம்பிக்கை கொள்ள இயலாதவர்களாயிருக்கின்றனர்; நாமோ தேவனுக்குப் பயப்படுகிறவர்கள் மாத்திரமல்ல, அவர் மேல் நம்பிக்கையும் வைத்திருக்கிறவர்கள்; அத்துடன் அந்த நம்பிக்கையை ஜனங்களுக்கு முன் அறிவிக்கிறவர்கள். நமக்காக தேவனிடத்தில் அநேகம் உண்டு; அவைகளை நம்முடைய தாக்கிக்கொள்ளவேண்டுமென்றால், அவருக்குப் பயப்படவேண்டும், அவர் மேல் நம்பிக்கை கொள்ளவேண்டும், அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தவும்வேண்டும்.

அவருடனான உறவு அகங்காரத்துக்குத் தப்பும் மறைவு

தேவன் ஆயத்தம்பண்ணிவைத்திருக்கிற நன்மைகளைக் குறித்துச் சொல்லும் தாவீது, **"மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர்"** என்று சொல்லுகிறான். ஹிந்தி மொழி வேதாகமத்தில் **"தரிசனம் பெறக்கூடிய மறைவிடத்திலே வைப்பீர்"** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. **அவரை தரிசிப்பதே, அவர் நமக்கு ஆயத்தம்பண்ணிவைத்திருக்கும் நன்மை**. மனுஷருடைய அகங்காரங்களிலிருந்து மறைந்து வாழும் இடத்திற்கு நம்மைக் கூட்டிச் செல்பவர் நமது தேவன். மேலும், நாவுகளின் சண்டைக்கும் நம்மை விலக்கி காப்பாற்றுகிறார். உலக வாழ்க்கையில் சண்டைகளும், சச்சரவுகளும் தவிர்க்கமுடியாதது என்று நாம் நினைக்கிறோம். மற்றவர்களைக் காட்டிலும் முந்திச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தில் அடுத்தவரை உரசிச் சென்றுவிடுகிறோம். ஒரே திசையில் பயணித்தாலும், பிறரைக் குறித்த கரிசனையற்றவர்களாக பயணிப்பதால் அடுத்தவரை உடனிருப்போருடன் உரசிவிடுகின்றோம். பொறுமையும், காத்திருக்கும் சுபாவமும் இல்லாதபடியினால் அடுத்தவரைக் காயப்படுத்திவிடுகின்றோம். எனினும், இவைகளிலிருந்தும் நம்மைப் பாதுகாக்க தேவன் போதுமானவர். நாவுகளின் சண்டைக்கும் விலக்கி நம்மை ஒளித்துவைக்கிறவர் அவர்.

நான் கனடா சென்றிருந்தபோது, ஓரிடத்தில் காரின் கதவை நான் திறந்தபோது, அது பக்கத்தில் நின்றிருந்த மற்றொரு காரின் மீது உரசிவிட்டது; என்னுடைய கவனமின்மையினால் அது நடந்துவிட்டது. அந்தக் காருக்குச் சொந்தக்காரர் வந்தபோது, நான் அவரிடத்தில், "ஐயா, மன்னித்துக்கொள்ளுங்கள், எனது காரின் கதவைத் திறக்கும்போது கை வழுவிவிட்டதால் இது நடந்துவிட்டது" என்று சொன்னேன். அவரோ, கோபத்தில் சத்தமிடத்தொடங்கினார். அதற்கான செலவினைக் கொடுக்க நாங்கள் ஆயத்தமாயிருந்தபோதிலும், அவரோ தொடர்ந்து சத்தமிட்டுக்கொண்டேயிருந்தார். இறுதியில், போலீசைக் கூப்பிடுவோம், என்று நாங்கள் சொன்னபோது, அந்த நபர் சென்றுவிட்டார். நம்முடைய கவனயீனத்தினால் அடுத்தவரை நாம் சிலவேளை உரசிவிடுவதுண்டு. நம்முடைய கவனயீனத்தினால் அடுத்தவரை நாம் உரசியிருந்தால், மன்னிப்பு கேட்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். மன்னித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டாலும் மன்னிக்க மனிதர்கள் ஆயத்தமாயிராதபோது, பரலோக தேவனையே கூப்பிடவேண்டும். மனிதர்களின் சண்டை, சச்சரவுகளிலிருந்து நம்மை பாதுகாப்பவர் நம் தேவன்.

இத்தனை பெரிய நன்மையை நமக்காக ஆயத்தம்பண்ணிவைத்திருக்கும் கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கும் நாம் எத்தனை பாக்கியமானவர்கள். தேவனுடனான உறவுக்கு வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுத்து, அவருடன் இணைந்திருந்தால் இத்தகைய நன்மையினைப் பெற நாமும் தகுதியுள்ளவர்களாக மாறுவோம்.

GEMS COLLEGE OF EDUCATION

(Managed by Gospel Echoing Missionary Society)

Main Road, Ramdihra, Thilothu, Rohtas (Dist.) Pin- 821312.

WALK- IN-INTERVIEW

Applications are invited from eligible interested candidates for the following posts:

1. Principal
2. Faculty Members
3. Instructors: Physical education Staff, Arts & Craft Staff.
4. Office Staff: Accounts Assistant, Office Assistant, Computer Operator, Technical Assistant, Librarian, Lab. Attendant, Store Keeper, Helper/Peon
3. Qualification, Experience & Salary: As per NCTE Norms.

Resumes may be sent through e-mail: geschool@gemsbihar.org and CC to fdjohnson1966@gmail.com Or can be sent to the following address:

The Correspondent/Secretary,
Gems College of Education,
GEMS Campus, Sikaria, Indrapuri (Post)
Rohtas –dist
Bihar- 821308
Phone - 06184- 234112

Interview date displayed on www.gemsce.org

ஜெம்ஸ் பொதுக்குழு கூடுகை

பெங்களூர்

2015-ம் ஆண்டின் ஜெம்ஸ் பொதுக்குழு கூடுகை, பெங்களூரிலுள்ள Ecumenical Christian Centre (ECC) வளாகத்தில் ஜுன் 2,3,4 ஆகிய நாட்களில் நடைபெற்றது; பொதுக்குழு உறுப்பினர்கள் குடும்பமாக இக்கூடுகையில் பங்கேற்றனர். கடந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் ஊழியப் பாதையில் செய்த எண்ணிலடங்கா நன்மைகளை நினைத்தும், புதிய திட்டங்கள் பலவற்றை பணித்தளங்களில் செயல்படுத்த நமது கரங்களை பெலப்படுத்தியதை நினைத்தும் அவரைத் துதித்தோம்; அத்துடன், முன்னிற்கும் இவ்வாண்டிலும் கர்த்தரின் சித்தத்தையே முன்நிறுத்தி ஊழியத்தில் அதனைச் செய்து முடிக்க ஒப்புக்கொடுத்தோம். பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்களுடன் நேபாள், பூடான், மியான்மர் போன்ற அண்டை தேசங்களிலும் பரந்திருக்கும் ஜெம்ஸ்-ன் பணி, வரும் நாட்களில் உலகெங்கும் மிஷனரி ஊழியத் தாக்கத்தை உண்டாக்கும் ஊழியமாக உருவெடுக்கவேண்டும் என்ற பாரத்துடன் ஊழியர்களாக ஒருமனப்பட்டு ஜெபித்தோம். ஜெம்ஸ் மிஷனரிகளின் பிள்ளைகள் மிஷனரிகளாக ஜெம்ஸ் ஊழியத்துடன் இணைந்தது ஆனந்தமான நிகழ்வு. கூடுகையின்போது, சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் மற்றும், ஜெம்ஸ் இயக்குநர் Dr. அசோக்குமார் ஆகியோர் செய்திகளைப் பகிர்ந்துகொண்டனர்.

முன்நாள்களில், கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக கொதித்தெழுந்த சீன தேசத்தில், கொத்துக் கொத்தாக ஜனங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டதனையும், ஆத்துமாக்களுக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த ஊழியர்களையும் குறித்த வீடியோ காட்சி, கண்கலங்கச் செய்தது மாத்திரமல்ல, நமது மண்ணிலும் அது நடைபெறுமாயின் வீறுநடைபோட ஆயத்தமாகவேண்டும் என்ற பாரத்தைக் கொடுத்தது. வட இந்தியப் பணித்தளங்களின் பெருந்தேவையான மருத்துவப் பணியினை வரும் நாட்களில் துரிதமாகச் செய்ய நடமாடும் மருத்துவ பரிசோதனை நிலைய வாகனம் ஜெபத்துடன் அர்ப்பணிக்கப்பட்டது. பெங்களூர் ஜெம்ஸ் உழியர்கள், பங்காளர்கள் மற்றும் தன்னார்வமாக ஜெம்ஸ் ஊழியத்தில் தங்களை இணைத்துக்கொண்டு செயல்படும் சகோதர சகோதரிகள் கூடுகைக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

ஜெம்ஸ் பொதுக்குழு கூடுகை, பெங்களூர்

ஜெம்ஸ் ஊழியத்தில் தங்களை இணைத்துக்கொண்ட
ஜெம்ஸ் மிஷனரிகளின் பிள்ளைகள்

பணித்தளங்களில் மருத்துவப் பணிகளைத் துரிதப்படுத்த

நடமாடும் மருத்துவப் பரிசோதனை நிலையம்

அர்ப்பணிப்பு

சிறுவர் ஊழியங்கள்

தலைமுறைகள் தேவனுக்காகட்டும்

வருங்கால தலைமுறையினரான சிறுவர், சிறுமியர், மாணவர்களை கிறிஸ்துவுக்குள் உருவாக்கும் தரிசனம் நம்முடையது. கிறிஸ்துவின் அன்பிற்குள் அவர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும், சிறுவயதிலேயே சத்தியத்திற்குள் அவர்களை வழிநடத்தி, வாலிபப்பருவத்திலும், வயதாகும் காலத்திலும் சரிந்துவிழாதபடிக்கு அவர்கள் காலடிகளைக் காக்கப் போதுமான பெலத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதை மனதிற்கொண்டவர்களாக, சிறுவர் துறை ஊழியர்கள் பன்முனைகளில் சிறுவர்கள் மத்தியில் ஊழியங்களைச் செய்துவருகின்றனர். ஆங்கில மற்றும் ஹிந்தி மொழி பள்ளிகளில் நடைபெற்ற Personality Development Program (PDP) சிறப்பு முகாம்களில், 26 சிறுவர்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தனர்.

பீஹாரில், கல்வியறிவில் பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்களில் வாழும் கிறிஸ்துவை அறியாத ஆயிரத்துக்கும் மேலான சிறுவர், சிறுமியர் மற்றும் இளைஞரையும் சந்திக்கும் தரிசனத்துடன், கிராமங்களில் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் சிறுவர்கள் பலருக்கு கிறிஸ்துவின் அன்பு அறிவிக்கப்பட்டது. பாடல்கள், கதைகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் சிறுவர்களின் ஆர்வத்தைத் தூண்டின; ஆபிரகாம் லிங்கன் உட்பட உலகை தங்கள் பக்கம் திருப்பிய பல்வேறு தலைவர்களைப் பற்றிய வரலாற்று நிகழ்வுகள் எடுத்துக்கூறப்பட்டன. இதனைத் தொடர்ந்து கிராமங்களிலும், பள்ளிகளிலும் சிறுவர் மற்றும் இளைஞோர் ஜெபக் குழுக்களையும் ஏற்படுத்தியுள்ளோம்.

மே மாதத்தில் 48 இடங்களில் சிறுவர் ஊழியர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன; சுமார் 3000 -க்கும் அதிகமான விசுவாசிகள் இப்பயிற்சி வகுப்பில் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். **"பிள்ளைகள் சபையின் எதிர்காலம், பிள்ளைகள் ஊழியத்தின் அவசியம்"** போன்ற கருத்துக்கள் வலியுறுத்திக் கூறப்பட்டன. ஜெம்ஸ் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களும் இம்முகாம்களின் மூலமாகச் சந்திக்கப்பட்டனர்.

பணித்தளச் செய்திகள்

வனாஞ்சல் கோட்டம்

ஜூலை 01 **கும்லா**

சர்குபாஷன்டோலி, கர்ஹி, பாமண்டி, ஹன்ஜதா, பாக்ரா, சாலேருட் ஆகிய கிராமங்களில் 170 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விஷ்வநாத்சிங், பர்கி, ராஜ்குமார் சாகு, ரூபன், தேவி ஆகியோருடைய வீடுகளில் ஜெபக்கூடுகை நடத்தப்பட்டது. அம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஆமின் மற்றும் தோல்வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த ரோஷன், லேஹ்ரா ஆகியோர் விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார்கள். மனநிலை பாதிக்கப்பட்டுள்ள விஷ்வநாத்சிங்கின் பரிபூரண சுகத்திற்காகவும், ரெப்புசிங், கோவிந்த்சிங், ராஜிலோஹ்ரா, அஜய்ரோஷ்ரா ஆகியோருக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கவும், இப்பணித்தள ஊழியருடைய தந்தையின் ஆவிக்குரிய வாழ்க்கைக்காகவும், சகோதிரியின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 02 **பந்த்தோடியா**

பந்கொடா, பந்தௌடியா, பத்தேபாக்கி ஆகிய இடங்களில் 100 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விர்க்கம் கிராமத்தில் சரிதா, பேய்ரா, பாத்லிபேய்ரா, பிரபல்குமார், சோம்நாத், மனேஜ்மாத்தோ, வக்கில்ஹன்ஸா ஆகியோருக்கு பின்தொடர் ஊழியத்தின்வாயிலாக ஜெபிக்கப்பட்டது. 150 பிள்ளைகளுக்கு V.B.S. நடத்தப்பட்டது. வயிற்றுவலியினால் பாதிக்கப்பட்டிருந்த சரிதாதேவி, தலை வலியினால் கஷ்டப்பட்ட பாஸ்தேவ் ஆகியோருக்கு தேவன் சுகத்தைக் கொடுத்தார். வாசுதேவ், வீருராம் ஆகியோர் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலையாகவும், மரத்திலிருந்து கீழேவிழுந்ததால் கையில் அடிபட்டு வேதனையோடிருக்கும் மணிகாந்த்ரவி மற்றும் எலும்பு வலியினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பணித்தள ஊழியரின் மகன் ஆகியோருடைய சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 03 பதம்டா

5 நாட்கள் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளிக் கூடுகையில் 150 சிறார்கள் கலந்து கொண்டனர். துங்துரா என்ற இடத்தில் 30 பேரு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பாரியா என்பவர் வீட்டில் நடத்தப்பட்ட ஜெபக்கூடுகையில் 22 பேர் கலந்து கொண்டனர். பிசாசின்பிடியிலிருந்து விடுதலை பெற்ற சோனாலிசிங் என்ற சிறுமிக்காகவும், சேதோகர்க்கர் அம்மைநோயிலிருந்து ஜெபத்தினால் பெற்ற சுகத்திற்காகவும் துதியுங்கள். ஜோர்சா, லச்சிப்பூர் ஆகிய கிராமமக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் படிப்பிற்காகவும், ஊழியரின் சீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 04 தோர்பா

வினோத் என்பவர் வீட்டில் நடத்தப்பட்ட ஜெபக்கூடுகையில் 14 பேர் கலந்து கொண்டனர். டெஹறாடோர் கிராமத்தில் சுமன் டெங்கராவிற்கு தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. போகோபாடோலா கிராமத்தைச்சேர்ந்த டோப்போ குடும்பத்தினற்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஞாயிறு ஆராதனையில் 80 முதல் 90 பேர் கலந்து கொள்கிறார்கள். டக்ராமா என்ற கிராமத்தைச் சேர்ந்த சப்னம் என்ற சகோதிரிக்கு சுகப்பிரசவத்தின் வாயிலாக குழந்தையைக் கொடுத்து தேவன் ஆசிர்வதித்தார். அடிக்கடி வியாதிப்பட்டிருந்த ஆசிஸிக்கு தேவன் பரிபூரணசுகத்தைக் கொடுத்தார். சபை கட்டுமானப்பணி விரைவில் முடிவடையவும், எல்லா கிராமங்களும் சுவிசேஷத்தால் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 05 பர்காமா ராம்கர்ஹ்

குதிரா என்னும் பணித்தளத்தில் ஆராதனை நடத்தப்பட்டது. 4 கிராமங்களில் வீட்டுசபை நடத்தப்பட்டது. வாலிபர்கள், சிறுவர்கள் கூடுகையில் ஆலோசனை வழங்கி ஜெபிக்கப்பட்டது. 4 மாதமாக நடக்க முடியாமலிருந்த கிசுன் சபையார் ஜெபித்ததினிமித்தம் அற்புதமாய் நடக்க ஆரம்பித்தார். துதியுங்கள்! பூஜாரியான சுமதா தேவராஜ் என்பவரை தேவன் சந்திக்கவும், விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிற்கவும், இப்பணித்தள ஊழியருடைய உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 06 பர்காகாவோன்

பான்டேபூரா, கரி, கன்டாபேர், பாண்டு, பத்தாடி, பாயூபாரா ஆகிய கிராமங்களில் 75 பேருக்கு தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. நரேஷ் என்பவர் வீட்டில் நடத்தப்பட்ட ஜெபக் கூடுகையில் 15 பேர் கலந்து கொண்டனர். பான்டுக்கப், பான்டேபூரா கிராமங்களில் உபவாசக் கூடுகை நடத்தப்பட்டது. பான்டுகாவ் கிராமத்தில் சுவிசேஷத்திற்கு புதிதாக வழி திறக்கப்பட்டமைக்காகவும், ஞாயிறு

ஆராதனை நடத்த தனியார் பள்ளியில் இடம் கிடைத்தமைக்காக துதியுங்கள். இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும், கடந்த பல மாதங்களாக ஊழியத்திற்குக் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும் மற்றும் இப்பணித்தள ஊழியரின் மனைவிக்கு சுகப்பிரசவம் உண்டாகவும் ஜெபியுங்கள்

ஜூலை 07 **ஹேஹாய்**

இப்பகுதியில் உள்ள தனியார் மற்றும் அரசுப்பள்ளி மாணவர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. வேஹா கிராம சிறுவர் கூடுகையில் முஸ்லீம் சிறுவர்கள் உற்சாகமாக கலந்துகோண்டு வசனத்தைக் கேட்டு வருகிறார்கள். சுப்தா, சோனி, காஜல், தீவ்யா, நிஷா, அஜய், விவேக். தேவானத் ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். சீரர பெலவீனத்தோடு இருக்கிற சித்தாவின் சுகத்திற்காகவும், தனது மாமியார் மரித்ததினிமித்தம் துக்கத்தோடு இருக்கிற விமலாதேவியின் ஆறுதலுக்காகவும் மற்றும் பிரஜாபதியின் பெற்றோர் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 08 **சாரிஹ்**

ஹஜ்ஹசுடு கிராமத்தில் முதன்முறையாக 3 குடும்பங்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. விசுவாசிகளின் 12 குடும்பங்களுக்கு ஜெபித்து ஆலோசனைக் கொடுக்கப்பட்டது. லால்பங்களா, 45 காலனி ஆகிய இடங்களில் உபவாசக்கூடுகை நடத்தப்பட்டது. ஹஜாரிபாக் பட்டணத்தில் தேவன் ஊழியம் செய்வதற்கு திறந்த வாசலைத் தந்தபடியாலும், மீனா என்ற சகோதிரிக்கு இரத்த அழுத்த நோயிலிருந்து தேவன் கொடுத்த சுகத்திற்காக துதியுங்கள். புற்று நோயினால் கஷ்டப்படும் சுரேந்தருக்கு தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுக்கவும், பின்மாற்றத்தில் இருக்கிற விசுவாசிகளுக்காகவும், ஊழிய எதிர்ப்புகள் மாறவும் ஜெபியுங்கள்.

ஜூலை 09 **சண்டில்**

நிம்டி, உமித், டும்டால், ஒபாடாம் ஆகிய இடங்களில் 150 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மோதிடி, ஹைத்திரட் ஆகிய கிராமங்களில் வீட்டுக்கூடுகை நடத்தப்பட்டது. தூத்தூல் என்ற கிராமத்தில் 60 பேருக்கு தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. மூக்கிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டே இருந்த காளிபத்சிங்கிற்கு ஜெபத்தினால் தேவன் சுகத்தைக் கொடுத்தார். நீண்ட நாட்களாக கிறிஸ்துவை மறுதலித்துவந்த நீத்துமண்டல்சிங் கிறிஸ்துவிற்கு சொந்தமானார். இப்பகுதியில் சுற்றித்திரியும் காட்டு யானைகள் தொந்தரவு மாறவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய மகனின் மேற்படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜார்க்கண்ட் கோட்டம்

ஜூலை 10 **ஜார்வா**

ஜோராக், பங்களூ, சேமர்டோலி, சேமராடிஹ், கோச்சடேகா, பாகர்டோலி, சேமரா, பிஜோடிபா, ஷிக்கோயி ஆகிய கிராமங்களில் 70 பேருக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பாகர்டோலி, ராஜ்நகர் ஆகிய கிராமங்களில் உபவாச ஜெபக்கூடுகை தொடர்ந்து நடத்தப்பட்டுவருகிறது. சிறுவர்கள் மத்தியில் ஞாயிறு வகுப்புகள் நடத்தப்படுகிறது. ஊழியர்களுக்கான ஒருநாள் சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது. சீரப் பெலவீனத்தோடு இருந்த சம்பா என்பவருடைய மனைவி கமலாவிற்கு கர்த்தர் சுகத்தைக் கொடுத்தார். இப்பணித்தள சபையில் ஆழ்குழாய் கிணறு மற்றும் கழிவறை வசதிகள் செய்யப்படவும், பின்மாற்றத்தில் இருக்கிற பழைய விசுவாசிகளுக்காகவும், இப்பணித்தள ஊழியருடைய மகன் ஆமோஷ் குமாரின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 11 **ராஜ்ஹாரா**

பெத்லா பகுதியில் நடத்தப்பட்ட நற்செய்தி பெருவிழாவில் வசனம் பிரசங்கிக்கப்பட்டு புறஜாதி மக்களுக்கு புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டது. குடும்பக் கூடுகை மற்றும் உபவாச ஜெபக்கூடுகை தடையின்றி நடத்தப்பட்டுவருகிறது. சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சொந்தமாக ஆலயம் இல்லாதிருக்கிற இப்பணித்தளத்தில் ஆலயம் கட்டுவதற்கு இடம் வாங்கப்படவும், புதிய இடங்களில் சுவிசேஷத்திற்கு வழி திறக்கப்படவும் ஞானஸ்நானத்திற்கு ஆர்வமாக உள்ள புதிய விசுவாசிகளுக்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியரின் உடன் பிறந்தவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 12 **கர்வாஹ்**

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட 6 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பண்டரியா மற்றும் பெத்லா ஆகிய இடங்களில் ஆல்பா பயிற்சிக் கூடுகை நடத்தப்பட்டது. இப்பணித்தள சபையில் ஞானஸ்நான ஆராதனை நடத்தப்பட்டது. சத்தர்ப்பூர் பகுதியில் சபை கட்டுவதற்கு சொந்தமாக நிலம் கிடைக்க தேவன் கிருபை செய்தார். இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியும் குழந்தைப் பாக்கியம் இல்லாதிருக்கிற லீலாவதி, விஜி ஆகியோரின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும், சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் ஆத்தும அறுவடை செய்யப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 13 போட்டா

மாயாப்பூர், ஷேம்பர்பூட்டணி, ஷாலே, ஷரணாடிஹ், போட்டோலி, மஹீவாடாண்ட், ஔராடோலி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. 4 இடங்களில் 103 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகளும், புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டது. குலு என்பவருடைய மனைவி சோட்டிக்கு உடல் பெலவீனத்திலிருந்து கர்த்தர் விடுதலைக் கொடுத்தார். துதியுங்கள்! இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்ட ஜனங்கள் இரட்சிப்பிற்குள் வரவும், இப்பணித்தள ஊழியரின் மகள்கள் குஸ்பு மின்ஜி, பிரசன்ஸா மின்ஜி ஆகியோரின் படிப்பிற்காகவும் மற்றும் இவரது மனைவியின் கண்பார்வை கோளாறு சரியாகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 14 தஸ்ரார்

சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவந்த 7 இடங்களில் ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பிரதி வெள்ளிக்கிழமை உபவாசக் கூடுகை தடையின்றி நடத்தப்படுகிறது. சங்கிலித் தொடர் ஜெபக் கூடுகையின் பலனால் விசுவாசிகள் குடும்பங்களில் மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. விசுவாசிளுக்கான கன்வென்ஷன் கூடுகையில் 200 விசுவாசிகள் கலந்து கொண்டனர். சிறுவர்கள் மத்தியில் நடத்தப்படுகிற ஊழியத்திற்காகவும், ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிறவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 15 ஜப்லா

பன்னட், குகஹி, ஷோபா, தக்வார், காமத், பிஹாரி, மஹீடாண்ட், மஜியாவ் ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. புதிய நபர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பள்ளி மாணவர்கள் மற்றும் ஆராதனைக்கு வரும் சிறுவர்கள் மத்தியில் விடுமுறை வேதாகமப்பள்ளி நடத்தப்பட்டது. வாழக்கையில் சமாதானமில்லாதிருந்த சீதா என்பவர் சமாதானத்தின் தேவனை தேடினபடியால் சமாதானத்தைப் பெற்றுக் கொண்டார். பொய் வழக்குப்போட்டு சிறையில் இருந்த ரமேஷ் என்பவருக்கு நீதியின் தேவன் விடுதலையைக் கொடுத்தார். திருமணமாகியும் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படாமல் இருக்கிற விஜி, சோனிதேவி, ஷோபாதேவி ஆகியோரின் குழந்தைப் பாக்கியத்திற்காகவும், புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கிருஷ்ணா மேஹத்தா என்பவரின் சுகத்திற்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடை மனைவியின் சுகப்பிரசவத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 16 ரபாதா

கர்கபடி, ரப்தாடிஹ், கைராட்டி, ஹரினாமட், கோதுவாடிஹ், கேலால்பர், குராகலயா, மந்திராடோலா ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பள்ளி

மாணவர்கள் மத்தியில் வசனம் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. சாத்தானின் தொல்லையால் பாதிக்கப்பட்ட நிர்மல்சௌதிரியின் மனைவிக்கு தேவன் கொடுத்த அற்புத விடுதலைக்காக துதியுங்கள். இப்பகுதியில் சொந்தமாக ஆலயம் கட்டுவதற்கு இடம் வாங்கப்படவும், சதீஷ் மனைவி விஜி தம்பதியருக்கு தேவன் ஒரு குழந்தை செல்வத்தைக் கொடுக்கவும், பின்மாற்றத்தில் உள்ள சூரஜ் மீண்டும் தேவ சமுகத்தை தேடவும் ஜெபியுங்கள்.

ஜூலை 17 கடுவா

இக்கோட்டத்தின் தலைமையிடமாக இப்பணித்தளம் செயல்பட்டு வருகிறது. இக்கோட்டத்தின் அனைத்து ஊழியர்களுக்கான ஒருநாள் சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது. இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. ஆலய கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசிகளுக்காக நடத்தப்பட்ட சிறப்புக் கூடுகையில் 300 பேர் கலந்து கொண்டனர். இப்பணித்தள ஊழியருடைய மகளின் வேலை வாய்ப்பிற்காக ஜெபித்த ஜெபத்தைக் கேட்ட தேவன் வங்கி வேலை கிடைக்கச் செய்தார். திருமண வயதை எட்டியுள்ள இப்பணித்தள ஊழிருடைய 3 பெண் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

சோன்பத்ரா கோட்டம்

ஜூலை 18 சுருக்கி

3 இடங்களில் சுவிசேஷத்திற்கு புதிதாக வழி திறக்கப்பட்டு முதன் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவந்த பழைய கிராமங்களில் பின் தொடர் ஊழியம் செய்யப்பட்டன. இப்பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் கட்டிடங்கள சேதமடைந்த நிலையிலும் உயிர்ச்சேதம் இல்லாமல் தேவன் அனைவரையும் பாதுகாத்தார். விசுவாசிகளின் வீடுகளில் மாலைநேர ஜெபக் கூடுகை புதிதாக ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டுவருகிறது. ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக ஒப்புக் கொடுத்துள்ள புதிய விசுவாசிகளுக்காகவும், இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டப்படுவதற்கு நிலம் வாங்கப்படவும் ஜெபியுங்கள்.

ஜூலை 19 துதி

கோட்டா, கட்டோலி, பொக்கரா ஆகிய பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. கட்டோலி பகுதியில் ஞாயிறு ஆராதனை தடையின்றி தொடர்கிறது. இப்பணித்தளத்தில் செயல்படுகிற ஜெம்ஸ் ஆங்கிலப்பள்ளி மாணவர்களுக்கு வசனம் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஜெம்ஸ்

தெற்கு மண்டலத்தின் தலைமையிடமாக இப்பணித்தளம் செயல்பட்டு வருகிறது. ஆங்கிலப் பள்ளிக்கு அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் கிடைக்கவும், படித்து வருகிற மாணவர்களுக்கு விசேஷ ஞானத்திற்காகவும் மற்றும் பாதுகாப்பிற்காகவும், திருமணமாகி பல ஆண்டுகளாக குழந்தைப் பாக்கியம் இல்லாதிருக்கிற இப்பணித்தள ஊழியருடைய சகோதரனுக்கு சந்ததியை தேவன் கொடுக்கவும் மற்றும் இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் கோண்டு இன மலைவாழ் மக்களுக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 20 கஜீரி

வாதாடு என்ற கிராமத்தில் வாரந்தோறும் வீட்டுசபை ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. கோர்வா என்ற புதிய கிராமத்தில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக முதன் முதலாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சுவிசேஷம் அறிவித்துவந்த கோர்ச்சி கிராமத்தில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தொடர் வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த கோர்ஜா கிராமவாசியான மஞ்சு என்ற சகோதரிக்கு தேவன் சுகத்தைக் கொடுத்தார். விசுவாசிகள் விடுதலையோடு ஆராதிக்கக்கூடிய சொந்த ஆலயம் கட்டப்படவும், திருவசனத்தால் தொடப்பட்டு திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிற புதிய விசுவாசிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 21 ரீவா

ஜிவலா, பட்ரா காலனி, சிவநகர், ஆஸ்பத்திரி காலனி, கோரிரோலா ஆகிய 5 இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. 38 விசுவாசிகளுக்கு வேதபாட ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இருதய நோயினால் பாதிக்கப்பட்ட லல்லு என்பவருக்கு அறுவை சிகிச்சை இல்லாமையிலேயே ஜெபத்தினால் கர்த்தர் அற்புத சுகத்தைக் கொடுத்தார். இதினிமித்தம் முழு குடும்பமும் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். துதியுங்கள்! ஞானஸ்நானத்திற்கு தயாராகயிருக்கும் 30 பேர் தடையின்றி திருமுழுக்குப் பெறவும், பஹேரா பஞ்சாயத்தில் நடைபெறயிருக்கும் சுவிசேஷக் கூட்டங்களுக்காகவும், இப்பணித்தள ஊழியருடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 22 ஸித்தி

பிப்ரஹாடோலா, படௌலி, மதுரி, நௌதியா ஆகிய இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. மஹேந்தரசிங், ராம்பஹோர் ஜஸ்வால், ராம்நிவாஸ்ராவுத் ஆகியோரின் குடும்பத்தினர் சபை ஆராதனையில் புதிதாக கலந்து கொள்கிறார்கள். 10 வருடங்களாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்த மஹேந்தரசிங் என்பவருடைய மனைவி இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது

விடுதலையானார். துதியுங்கள்! ஆராதனை நடத்த தேவையான சொந்த இடம் கிடைக்கவும், புதிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு வாசல் திறக்கப்படவும் மற்றும் இப்பணித்தள ஊழியரின் பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 23 அன்பரா

கர்வா என்ற கிராமத்தில் கர்த்தரை அறியாதவர்கள் மத்தியில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. அபிஷேக்பால் என்பவரின் சகோதிரி கொதிக்கிற எண்ணெயில் விழுந்த பொழுதிலும் தேவன் அவரை அற்புதமாக பாதுகாத்தார். விபத்தில் சிக்கிய மூலச்சந்திரராம் என்பவரது ஜீவனை தேவன் பாதுகாத்தார். ரல் என்ற கிராமத்தின் ஊர் தலைவர் மனந்திரும்பவும், சபைக்கட்டிடத்திற்காக வாங்கியுள்ள நிலத்தின் பத்திரப்பதிவு எந்த தடையும் இல்லாமல் முடிவடையவும், கீழே விழுந்து எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கும் இப்பணித்தள ஊழியரின் பாட்டியின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 24 ஜெயந்

இக்கோட்டத்தின் தலையிடமாக இப்பணித்தளம் செயல்பட்டு வருகிறது. இப்பணித்தளத்தில் பெண்ளுக்காக நடத்தப்பட்ட சிறப்புக் கூடுகையில் 150 விசுவாச சகோதரிகள் உற்சாகமாக கலந்து கொண்டனர். முராதாபாத் பகுதியில் சத்தியத்தை அறிந்த அனேகர் விடுதலையானார்கள். ரோஹ்தாஸ், பஸ்டிஹா ஆகிய இடங்களில் குறைவுள்ளவர்களுக்கு வசனம் அறிவிக்கப்பட்டது. நீண்ட நாட்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கும் கே.பி. சிங்கின் சுகத்திற்காவும், வியாதிப்பட்டு வெகுநாட்களாக படுக்கையில் இருக்கும் ஜாசிதாஸின் சுகத்திற்காகவும் மற்றும் மருத்துவ சிகிச்சைப் பெற்றுவருகிற இப்பணித்தள ஊழியருடைய மனைவி, மகனின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 25 கரஹி

தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக 6 குடும்பங்கள் சுவிசேஷத்தைக் கேட்டனர். பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக சந்திக்கப்பட்டவர்களில் பிரேமா, கீரா, மீரா, கௌதம் ஆகியோர் விசுவாசத்தில் வளர்ந்து வருகிறார்கள். கீழே விழுந்து தலையில் பலத்த அடிபட்டும் ஜீவனோடு இருக்கிற ஓம்பிரகாஷ் என்பவருக்காக துதியுங்கள். .விகாஷ், சீமா, கீதா, மஞ்சு, வஸ்கீ, ரமாசங்கர் ஆகியோரின் இரட்சிப்பிற்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்தில் காணப்படும் ஆவிக்குரிய போராட்டங்கள் நீங்கவும் ஜெபியுங்கள்.

ஜூலை 26 தேவகோவான்

9 இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷ வாசனை வீசியது. தொடர் ஊழியத்தின் வாயிலாக சந்திக்கப்பட்ட 20 பேருக்கு புதிய

ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. ஒருநாள் நடத்தப்பட்ட சுகமளிக்கும் கூட்டத்தில் தேவனுடைய அற்புதங்கள் வெளிப்பட்டது. மனநிலை பாதிக்கப்பட்டிருந்த பூலா என்ற சகோதிரிக்கு தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார். வயிற்று வலியினால் வேதனைப்பட்டுவந்த சந்தீப்பட்டேலுக்கு விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகம் கிடைத்தது. திடீரென்று சீரம் வீக்கமடைந்த இப்பணித்தள ஊழியரின் சுகத்திற்காக எறெடுக்கப்பட்ட விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்ட தேவன் சுகத்தைக் கொடுத்தார். புதிய இடங்களில் சுவிசேஷத்திற்கு வழி திறக்கப்பட ஜெபியுங்கள்.

மஹாராஷ்டிரா கோட்டம்

ஜூலை 27 **32-ஷிராலா**

இப்பணித்தளத்தில் பெண்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சிக் கூடுகையில் 30 பெண்கள் கலந்து கொண்டனர். லவ்ஹாவில் நடத்தப்பட்ட சிறுவர் முகாமில் 162 சிறுவர்கள் கலந்துகொண்டார்கள். 3 நாட்கள் நடத்தப்பட்ட உபவாசக்கூட்டத்தில் ஜெம்ஸ் தலைவர்கள் கொடுத்த தேவ செய்தியினால் விசுவாசிகள் பெலனடைந்தார்கள். ஷிராலாவில் 12 நாட்கள் ஊழியர்களுக்காக நடத்தப்பட்ட சிறப்புப் பயிற்சி ஊழியர்களை அனல்மூட்டி எழும்பச்செய்தது. லவ்ஹாவில் நடத்தப்பட்ட உபவாசக்கூட்டத்தின் வாயிலாக 70 பேர் ஆசிர்வதிக்கப்பட்டனர். பிலாஸி என்ற இடத்தில் சொந்தமாக ஆலயம் ஸ்தாபிக்கப்படவும், இப்பணித்தள ஊழியருடைய சகோதரி மாயாவின் திருமணத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 28 **ஷிராஸி**

ஷிராலா என்ற பகுதியில் நடத்தப்பட்ட உபவாசக் கூடுகையில் விசுவாசிகள் உற்சாகமாக கலந்து கொண்டனர். இப்பணித்தளத்தில் 3 நாட்கள் நடத்தப்பட்ட சிறப்புக் கூடுகையில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் ஆவியானவரின் நிறைவைப் பெற்றனர். தேபாவடி என்ற இடத்தில் தேவ ஊழியர்களுக்கான ஒருநாள் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. சிறுவர்களுக்காக நடத்தப்பட்ட சிறப்பு ஜெப முகாம் ஆசீர்வாதமாக இருந்தது. இப்பகுதியில் காணப்படும் ஊழிய எதிர்ப்புகள் மாறவும், இப்பணித்தள ஊழியருடைய மனைவி அலிஷாவின் சீரர ஆரோக்கியத்திற்காகவும், மகேஷ், பிரசாந்த், ஷியாம் ஆகியோரின் ஆத்தும இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 29 **சங்ருல்**

லவ்ஹா என்ற இடத்தில் மூன்று நாட்கள் நடத்தப்பட்ட உபவாசக்கூட்டத்தில் 120 பேர் கூடி ஜெபித்தார்கள். இப்பணித்தள சபையில் நடத்தப்பட்ட ஞானஸ்நான ஆராதனையின் வாயிலாக 6 பேர் திருமுழுக்குப் பெற்றார்கள். இக்கோட்டத்தின் அனைத்துப் பணித்தளங்களிலும் GIANT ஜெபக்கூடுகை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பின்மாற்றத்தில் சென்றுள்ள மதுக்கர், கஞ்சன் ஆகியோருக்காகவும், புதிய விசுவாசியான பூனம் திருமுழுக்குப்பெறவும் மற்றும் அடிக்கடி சரீர பெலவீனப்படுகிற இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகள் சாக்ஷி, அனுக்ரஹ், அபிஷேக் ஆகியோரின் சரீர ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஜூலை 30 கோப்பார்டே

இப்பணித்தளத்தில் நடத்தப்பட்ட சிறு சுவிசேஷக் கூட்டத்தின் வாயிலாக சுமார் 200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவந்த 7 இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருந்த அவிஷ் என்பருக்கு இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது விடுதலை கிடைத்தது. பிரதி வெள்ளி மற்றும் சனிக்கிழமை 2 இடங்களில் உபவாசக் கூடுகை நடத்தப்பட்டுவருகிறது. இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள இடங்களில் வீட்டுசபை ஆராதனை புதிதாக ஆரம்பிக்கப்படவும், திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிற 8 புதிய விசுவாசிகளுக்காகவும், விசுவாசிகளின் குடும்பங்களில் காணப்படும் ஏழ்மைநிலை மாறவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகள் ஆனந்த், ப்ரனாவின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்

ஜூலை 31 கார்வீர்

தேவ்ரூக் என்ற இடத்தில் செய்யப்பட்டுவருகிற பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக ஆத்துமாக்கள் புதிதாக சபையில் அங்கமாகி வருகிறார்கள். ஜெம்ஸ் தெற்கு மண்டலத்தின் அனைத்து ஊழியர்களின் குடும்பக் கூடுகை டெஹ்ராடூன் பகுதியில் 3 நாட்கள் ஆசீர்வாதமாக நடந்தது. அடிக்கடி ஏற்பட்ட வயிற்று வலியினால் வேதனைப்பட்டுவந்த பிரியா மனோகர் விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார். இப்பகுதியில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும், சிறுவர்கள் மத்தியில் நடத்தப்பட்டுவருகிற ஞாயிறு பள்ளிக்காகவும் மற்றும் ஆவிக்குரிய போராட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பணித்தள ஊழியருடைய சகோதரர் ராஜேந்திரன் ஷிண்டேயின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

GEMS SATHAM
now available online
@
www.gemsbihar.org
Read
Download
Share

GEMS ACTION CENTERS

CHENNAI	8,3rd Jeevan Nagar, Adambakkam, Chennai - 600088, Ph. : 044-22670099
CHENNAI	16, Perumal Kovil Street, Nerkundram-600107 Cell: +919444017330
COIMBATORE	No. 2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : +919344824072
DINDUGAL	43/20C, Samiyar Thottam, Nagal Nagar, Dindugal-624003. Cell:+919942824035
ERODE	No.34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode-638011. Cell : +919486976202
KODAIKANAL	143-2, Packiapuram, Kodaikanal-624101. Cell : +919443221776
KOVILPATTI	11, Theppakulam street, Kovilpatti-628501. Ph.: 04632-225890
MARTHANDAM	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K.District-629165. Cell:+919788689771, +919486357950
NAZARETH	No:3,Dasan street,Nazareth-628189,Ph;9442094110
SIVAKASI	3/1350/9, Sattur Road, Parraipatti, Sivakasi-626189. Cell: +919843088840
NAGERCOIL	66-E,Bright street, Nagercoil-629009. Cell:+919894965520, +9194883 35666
TUTICORIN	38, Sarangapani street, Tuticorin-2. Cell:+919442210629
TUTICORIN	J.S.Traders, Hotel Geetha Complex, Polepettai, Tuticorin- 628002. Cell: +919442166061
VELLORE	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore-632009. Cell: +919952545181

REGIONAL ACTION CENTERS

CHENNAI	Plot No. 19-A, 3rd st.,Megala Nagar, Vengaivasal-600073. Cell: +919444763141
COIMBATORE	No. 7, Laxmi Puram, !st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025. Cell: 9442934613
MADURAI	Plot No. 21, Sharon church street, Booman Nagar-625018. Cell: +919865583563
TRICHY	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar-620020. Cell:+919443555577
TIRUNELVELI	14/109 A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai-627 002, Cell ph: +9194431 13322.

OTHER STATE ACTION CENTERS

BANGALORE	No. 10, 4th Cross (2nd floor) Oil Mill Road, Lingarajapuram, St.Thomas Town P.O, 560084. Cell:+919448517025
NAVI MUMBAI	104, Amandmath, Plot 15, Sector 19, Nerul East, Navi Mumbai -400706. Cell:+919322730294, +919820701775
PONDICHERRY	No.5, Kamarajar Street, Tagore Nagar, Lawspet, Pondicherry -605008. Cell: +919486796631
KERELA	No.4 N.V.Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005, Ph: +919486357950

GENERAL ACTION CENTER

GEMS, 16-A, Chinna Koil street, Adaikalapuram, Murugankurichi, Tirunelveli-627002.
Ph.:0462 2581131 Cell:+919443429735, Email:promotions@gemsbihar.org

GEMS POLYTECHNIC

GEMS B.ED. COLLEGE

New Arrivals

புதிய வெளியீடுகள்

GEMS Educational Media Services

Regd. office :

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

GEMS Action Center

GEMS, 16-A, Chinna Koil Street,
Adaikalapuram, Murugankurichi,
Tirunelveli - 627 002. Ph : 0462-2581131
E-Mail : nellaioffice@gemsbihar.org

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

To

....

....

....

....

Private circulation

தனிப்பிரதி ரூ. 10-
ஆண்டு சந்தா ரூ. 100-